DINAKARAN

17 NOV 2022

PAGE 15



# புதுவை பல்கலைக்கழகத்தில் பன்னாட்டு கருத்தரங்கம்



▶ புதுச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சார்பில் பன்னாட்டு கருத்தரங்கம் நடந்தது.

புதுச்சேரி, நவ. 17: புதுச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத் துறை சார்பில் வெகுஜன கலாச்சாரமும் தற்கால இலக்கியமும் என்கிற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டு கருத்தரங்கம் நடந்தது. ஆங்கில எழுத்தாளர் ஜோசிலின் தலைமை தாங்கினார். புதுவை பல்கலைக்கழக இயக்குனர் தரணிக்கரசு கருத்தரங்கை துவக்கி வைத்து பேசினார்.

சென்னை பல்கலைக்கழக ஆங்கிலத்துறை தலைவர் ஆர்ம்ஸ்ட்ராங் வாழ்த்துரை வழங்கினார். வாழ்வியல் புலமுதன்மையர் கிளமெண்ட் லூர்து, ஆங்கிலத்துறை தலைவர் மார்க்ஸ், பேராசிரியர்கள் பினு சக்கரியா, ரெஷ்மி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மொழியியல் புல முதன்மையர் பிரபாகர், காலடி ஸ்ரீ சங்கராச்சார்யா பல்கலைக்கழக பேராசிரியர் அஜய் சேகர், கண்ணூர் பல்கலைக்கழக பேராசிரியர் குன் அஹம்மத், மெட்ராஸ் கிறிஸ்துவ கல்லூரி பேராசிரியர் சாமுவேல் ரூபஸ், சாகித்ய அகாடெமியின் முன்னாள் உறுப்பினர் ராஜா ஆகியோர் சிறப்பு சொற்பொழிவுகளை வழங்கினர். இக்கருத்தரங்கில் 15 ஆய்வு அமர்வுகள் இடம் பெற்றிருந்தன. சமூக அறிவியல் ஆய்வாளர் ஞான அலோய்சியஸ் நன்றி கூறினார். நிறைவாக பாப்பம்பட்டி முனுசாமி குழுவினரின் பெரிய மேளமும், அடவு கலைக்குழுவின் பறை இசையும் நிகழ்த்தப்பட்டது.

MAALAI MALAR

17 NOV 2022

PAGE 3

புதுவை பல்கலைக்கழகத்தில்

# பன்னாட்டு கருத்தரங்கம்

புதுச்சேரி, நவ.17— புதுவை பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சார்பில் வெகுஜன கலாச்சாரமும், தற்கால இலக்கியமும் என்ற 2 நாள் பன்னாட்டு கருத்தரங்கம் நடந்தது.

ஆங்கில எழுத்தாளர் ஜோசலின் தலைமை வகித்தார். புதுவை பல்கலைக்கழக இயக்குனர் தரணிக்கரசு கருத்தரங்கை தொடங்கி வைத்தார். சென்னை பல்கலைக்கழக ஆங்கிலத்துறை தலைவர் ஆர்ம்ஸ்ட்ராங் வாழ்த்தினார். வாழ்வியல் புலமுதன்மையர் கிளமென்ட் லூர்து, ஆங்கிலத்துறை தலைவர் மார்க்ஸ், பேராசிரியர்கள் பினு சக்கரியா, ரெஷ்மி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக புல முதன்மையர் பிரபாகர், சங்கராச்சாரியா பல்கலைக்கழக பேராசிரியர் அஜய்சேகர், கண்ணூர் பல்கலைக்கழக பேராசிரியர் சாமுவேல்ரூபஸ், சாகித்ய அகாடமி முன்னாள் உறுப்பினர் ராஜா சிறப்புரையாற்றினர். கருத்தரங்கில் 15 ஆய்வு அமர்வுகள் இடம்பெற்றன. சமூக அறிவியல் ஆய்வாளர் ஞானஅலோய்சியஸ் நன்றி கூறினார். பாம்பம்பட்டி முனுசாமி குழுவினரின் பெரியமேளம், அடவு கலைக்குழுவின் பறை இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

DINAKARAN

17 NOV 2022

PAGE 5



# PONDICHERRY UNIVERSITY
**Kalapet, Puducherry-605 014.**

## EXAMINATION WING
## DISPOSAL OF OLD/WASTE PAPERS

Sealed Tenders are invited from reputed Firms for Disposal of Old/Waste Papers of Examination Wing. For detailed Tender Notification refer to the Pondicherry University website www.pondiuni.edu.in. Last date for receipt of Tender is 28.11.2022 at 12:30 p.m.

**REGISTRAR (i/c)**

THE TIMES OF INDIA

17 NOV 2022

PAGE 5

## Pondy univ to undertake joint projects

Pondicherry University has entered into a memorandum of understanding with the Policy Research Centre, Bangladesh in association with the Rajshahi University, Bangladesh. The institutions will undertake joint academic and research projects on contemporary issues of development, such as the capital market, the impact of climate change on tourism, probable marketing strategies for the tourism sector, disaster management and disaster risk reduction among others. TNN